## 11

# "நான் மிகவும் முதியவன் என்று யார் சொல்வது?"

## (2 இராஜாக்கள் 1)

*சார்பளவில் சிறிய நிகழ்ச்சியாக எலியாவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி 2 இராஜாக்கள் 1 புத்தகத்தில் முதல் அதிகாரத்தில் கூறப்படுகிறது. எலியா சுழற்காற்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவரது வாழ்வின் உச்சக்காட்சியைக் கூறுகிறதான 2ம் அதிகாரத்திற்குச் செல்வதற்கு இந்த அதி காரத்தைத் தாண்டிப்போகும்படி நாம் சோதிக்கப்படலாம். பின்வரும் மூன்று காரணங்களுக்காக நாம் அந்தத் தூண்டுதலைச் சீர்குலையச் செய்வோம்: (1) 2 இராஜாக்கள் 1ம் அதிகாரத்தைத் தவறவிட்டால், நமது பாடத்தொடர் முழுமையற்றதாக இருக்கும். (2) இந்த அதிகாரத்தில் உள்ள சில பாடங்கள் எலியாவின் வாழ்வின் மீதான மற்ற வசனப்பகுதிகளில் காணப்படுவதில்லை. இந்த வரலாற்றைத் தேவன் நமக்காகப் பதிவு செய்துள்ளார் என்பதற்கு இந்த பாடங்கள் போதுமான அளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. (3) முந்திய பாடங்களில் நாம் விட்டுவந்துள்ள பிணைக்கப்படாத பல நுனிகள் இங்கு கெட்டியாகப் பிணைக்கப்படுகின்றன.*

*நாம் மூன்று தனிநபர்களைக் கண்ணோக்குவோம். இருவர் நமது வேதவசனப்பகுதியில் காணப்படுகின்றனர். மூன்றாமவர் இன்றைய நாட்களில் நமது செய்தியைக் கேட்பவர்களில் காணப்படுகிறார். இந்தக் கடைசித் தனிநபரைக் கண்ணோக்குவதன் மூலமாக நாம் நமது பாடங்களைத் தரவழைப்போம்.*

### வடக்கு இஸ்ரவேலின் கலகக்கார ஆட்சியாளர் (1:1-9)

கலகக்கார ஆட்சியாளர் என்பவர், எலியா இருபது ஆண்டுகாலமாக யுத்தம் நடத்திய ஆகாப் இராஜா அல்ல, ஆனால் அவரது மகனான அகசியா ஆவார் (அனேகமாக இது அவரது முதல் மகனான இருக்கலாம்). அகசியா செய்த மூன்று விஷயங்களைக் கவனியுங்கள்.

*அகசியா கடந்த காலத்தைப் புறக்கணித்தார்*, அவரது வரலாறு 1 இராஜாக்கள் 22ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் தொடங்குகிறது:

> அப்படியே (ஆகாப்) ராஜா இறந்தபின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டான்; ராஜாவைச் சமாரியாவில் அடக்கம்பண்ணினார்கள். அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள்

> அவன் இரத்தத்தை நக்கினது (இப்போது வேசிகள் அங்கு குளித்தனர்) ... ஆகாப் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தலத்தில் ராஜாவானான் (1 இராஜாக்கள் 22:37, 38, 40).

அகசியா கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவர் வளர்ந்தபோது, எலியாவைப் பற்றி வரலாறுகளைக் கேள்விப்பட்டிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை: மூன்றரை ஆண்டுகள் பஞ்சம், கர்மேல் மலையின்மீது அக்கினி மற்றும் பாகாலின் தீர்க்கதரிசிகள் கொல்லப்படுதல்; மற்றும் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தில் தனது தந்தையின்மீது வைக்கப்பட்ட சாபம், பின்தொடர்ந்த மூன்று ஆண்டுகளில் அவற்றின் பயங்கரமான நிறைவேற்றம். அவர் ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லை என்பது உறுதி.

> ஆகாபின் குமாரனாகிய அகசியா யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் ராஜாவாகி, இஸ்ரவேலின்மேல் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி,[1] கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், தன் தாயின் வழியிலும், இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரன் யெரொபெயாமின் வழியிலும் நடந்து (1 இராஜாக்கள் 22:51, 52).

அவர் ‘‘தன் தகப்பன் வழியிலே நடந்தார்.’’ அவர் தமது தகப்பனின் பலவீனத்தைச் சுதந்தரித்துக் கொண்டார். மிகவும் குறிப்பாக அவர், “தன் தாயின் வழியிலே நடந்தார்.” இந்தச் சொற்றொடர் வேதாகமத்தில் இங்கு மாத்திரமே காணப்படுகிறது. அவரது தாயான யேசபேல் அரண்மனையில் இன்னும் வாழ்ந்துகொண்டிருந்தாள். அவர் “யெரோபெயாமின் வழியிலும் நடந்தார்.” இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தின் முதல் அரசரான யெரோபெயாம், இஸ்ரவேலை விக்கிரகாராதனைக்குக் கீழ்நோக்கிய பாதையில் வழிநடத்தத் தொடங்கியிருந்தார். “பாகாலைச் சேவித்து (தாயைப்போல் பிள்ளை என்பதற்கு ஒப்ப) அவனைப் பணிந்துகொண்டு, தன் தகப்பன் செய்தபடியெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான்’’ (வசனம் 53).

உடனடியாகப் பிரச்சனைகள் எழுந்தன: “ஆகாப் மரணமடைந்தபின், மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்துபோனார்கள்” (1:1).[2] மோவாபியர் நீண்ட காலமாக இஸ்ரவேலின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தனர்;[3] இப்போது அவர்கள் தங்கள் சுதந்திரத்தைத் திரும்பவும் ஆதாயப்படுத்திக்கொண்டனர்.[4] இஸ்ரவேல் தோற்கடிக்கப்பட்ட இந்த சுதந்திரத்திற்கான போராட்டத்தைப் பற்றி, புகழ்பெற்ற மோவாபியக் கல்வெட்டு கூறுகிறது. ஒரு முற்றுகையில், ஏழாயிரம் இஸ்ரவேல் மக்கள் கொல்லப்பட்டனர்; பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாகக் கூட்டிச்செல்லப்பட்டனர். இருப்பினும், ஏவுதல் பெற்ற எழுத்தாளர், இந்தக் கலகக்கார ஆட்சியாளரின் குறுகிய ஆட்சியின் முடிவுக்கு அருகாமையான ஒரே நிகழ்ச்சியைப் பற்றி அதிகம் அக்கறையுள்ளவராக இருந்தார்.

அகசியா மாபெரும் வைத்தியரை அவமானப்படுத்தினார்: ‘‘அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து,

வியாதிப்பட்டு" (வசனம் 2அ). அகசியா தலைநகரில் தமது அரண்மனையில் இருந்தார். அவர் பெரிய திறந்த ஜன்னல்கள் கொண்ட மேல்வீட்டில் இருந்தார். இந்த ஜன்னல்கள், துளைகள் கொண்ட நவீனபாணியிலான மரவேலைப்பாடு கொண்ட கிராதிகளைக் கொண்டு மூடப்பட்டிருந்தன, இவைகள் அலங்காரம் மற்றும் தனிமைத்துவத்திற்காக வடிவமைக்கப் பட்டவைகளாக இருந்தன. அகசியா ஒரு ஜன்னல் விளிம்பின்மீது அமர்ந்திருந்தார் என்பது உறுதி. அவர் கிராதிக்கு எதிராகச் சாய்கையில், அவரைத் தாங்கமுடியாமல், அவர் விழுந்தார். அவர் கொல்லப்படவில்லை, ஆனால் அவர் மிகவும் காயப்பட்டு திரும்பக் குணமடையாத நிலையில் இருந்தார்.

தெய்வீக அருளிரக்கத்தைத் தவறற்ற வகையில் எடுத்துரைப்பவனாக இருப்பதாக என்னைப் பற்றி நான் உரிமைகோரிக்கொள்வதில்லை.[5] இருப்பினும், ஒருவேளை, ஒருவேளை மாத்திரம் இந்த நிகழ்ச்சியானது, அகசியா நீண்ட சிந்தனைகளைச் சிந்திக்கக் காரணமானதாக, அவர் யெகோவா தேவனிடத்தில் திரும்பக் காரணமானதாக இருந்திருக்கலாம். சங்கீதக்காரர், "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்" என்று கூறினார் (சங்கீதம் 119:71). இது, அகசியா தமது உணர்வுகளுக்கு வருவதற்கு ஏற்புடைய நேரமாக இருந்திருக்கும் - ஆனால் அவர் அவ்வாறு வரவில்லை.

அதற்குப் பதிலாக அவர், தெய்வீக மருத்துவரை அவமதித்தார். "இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான்" (வசனம் 2ஆ). "பாகால் சேபூப்" என்பது ஒரு கூட்டுப் பெயராக உள்ளது. இதன் முதல் பகுதியை நாம் ஏற்கனவே புரிந்துகொண்டுள்ளோம்: யேசபேலினால் அறிமுகப்படுத்தப்பட்ட "பாகால்" என்ற கடவுள். இந்தப் பெயர், "ஆண்டவர்" அல்லது "கடவுள்" என்று அர்த்தப்படுகிறது. இரண்டாவது பாகமான "சேபூப்" என்பது, "இங்கும் அங்கும் போகுதல், அலைதல், முன்னும் பின்னுமாக அசைதல்" என்று அர்த்தப்படுகிற வினைச்சொல் வடிவமாக உள்ளது. இது பெயர்ச் சொல் வடிவத்தில், ஈ என்று அழைக்கப்படும் பூச்சியைக் குறிக்கிறது. "பாகால்-சேபூப்" என்பது "ஈக்களின் ஆண்டவன்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. (பல இளம் வயதினர் அந்தப் பெயர் கொண்ட நாவலை வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.[6])

பாகால் இயற்கையின் கடவுள் என்று நினைக்கப்பட்டான். பாகால்-சேபூப் என்பவன் ஈக்களைக் கட்டுப்படுத்தும் உள்ளூர் வெளிப்பாடாக இருந்தான். முதல் பார்வையில் இது ஒன்றும் பெரியதாக இருப்பதில்லை. ஒரு ஈ என்பது மிகவும் சிறியதாக உள்ளது.[7] நாம் அதைக் கையினால் அடித்துவிடவோ அல்லது ஒரு பூச்சி மருந்தைத் தெளித்து விரட்டிவிடவோ முடியும். இருப்பினும் நம்மில் ஒருசிலர், சுகாதார விதிகள் மிகக் கொஞ்சமாகவும் ஜன்னல்கள் மீதான திரைகள் மிகவும் கொஞ்சமாகவும் இருக்கும் சூழ்நிலைகளின்கீழ், ஈக்கள் *மிகவும்* குறிப்பிடத்தக்கவை என்பதை நினைவுபடுத்திக் கொள்ள முடியும்.

ஒரு பழங்கதையானது, விருந்தினராக வந்திருந்த ஒரு பிரசங்கியார், உணவுமேஜையின் மீது இருந்த பழக்கேக் (போல் இருந்த) ஒன்றைச் சுட்டிக்காண்பித்து, "எனக்கு இந்த உலர்ந்த திராட்சை கொண்ட பழக்கேக் வேண்டும்" என்று கேட்டார். விருந்தளித்த பெண்மணி, அந்தக் கேக்கின்மீதிருந்த ஈக்கூட்டம் ஒன்றைப் புறம்பே துரத்த தமது கைகளைக் கொண்டு விசிறினார்.

"அது உலர்ந்த திராட்சையல்ல, அது முட்டையும் பாலும் சேர்ந்த கலவை" என்று கூறினார்.

ஒரு ஊழியக்காரன் என்ற வகையில் நான், ஆஸ்திரேலியா நாட்டிற்குள் சென்றபோது, புதர் ஈக்களைச் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. பிடிவாத மான இந்தப் பூச்சிகள் ஈரத்தை நாடுகின்றன. இது, அவைகள் ஒரு நபருடைய கண்கள், மூக்கு, வாய் அல்லது வியர்வைவரும் உடலின் எந்தப் பாகத்தை நோக்கியும் படையெடுத்துச் செல்கின்றன என்று அர்த்தப்படுகிறது. ஒருமுறை, கோடைகால முகாம் குழு ஒன்றுடன் ஆஸ்திரேலியாவின் உள்நாட்டில் இருக்கும் ஒரு சிறு நகரத்தில், கதவு தட்டும் ஊழியம் செய்துகொண்டிருக்கையில், நான் ஒரு மாணவரின் பின்னால் சென்று கொண்டிருந்தேன். அவரது வெள்ளைச் சட்டையின் பின்பகுதி வியர்வையால் ஊறிப்போய் இருந்தது - மற்றும் அது ஈக்கள் மொய்த்ததாக இருந்தது. (ஈக்களைத் துரத்துவதற்காக) முகத்திற்கு முன்னால் கைகளை வீசுவதை ஆஸ்திரேலியர்கள் நகைச்சுவையாக, "ஆஸ்தி ரேலியன் வணக்கம்" என்று அழைக்கின்றனர்.

எனவே, ''பாகால்-சேபூப்'' என்பது, எரிச்சலூட்டுதல் மற்றும் கொள்ளைநோயை வருவித்தல் அல்லது (சம அளவில் முக்கியத்துவமான) அந்த எரிச்சலை *நீக்குதல்* - ஆகியவற்றைச் செய்யக்கூடிய ஒரு கடவுளைக் குறித்தது. புதிய ஏற்பாட்டின் காலங்களில், பாகால் சேபூப் மூடநம்பிக்கையுள்ள மக்களின் மத்தியில் முக்கியத்துவமான இடத்தைப் பெற்றிருந்தான். மத்தேயு 12:22-28 வசனப்பகுதி, இயேசு ஒரு அசுத்த ஆவியைத் துரத்துதலைப் பற்றிக் கூறுகிறது. அவர் ஒரு அற்புதத்தைச் செய்தார் என்பதைப் பரிசேயர்கள் மறுக்க இயலாதவர்களாக இருந்தனர், ஆனால் அவர் அதை "பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே" செய்திருந்தார் என்று அவர்கள் கூறினர் (மத்தேயு 12:24). பெயல்செபூல் என்பவன் சாத்தானாக இருந்தான் அல்லது சாத்தானுடைய வேலைக்காரர்களில் ஒருவனாக இருந்தான் என்று கருதப்பட்டான், மற்றும் அவனது பெயரானது குணமாக்குதலுடன் இணைவுகொண்டிருந்தது.

மத்திய தரைக்கடலின் கடலோரமாக இருந்த எக்ரோன் என்ற பெலிஸ்தி யரின் நகரத்தில், பாகால் சேபூப்பின் விக்கிரம் ஒன்று இருந்தது. அகசியா குணமா காதபோது, அவர் தாம் அந்த வியாதியிலிருந்து சுகமாவாரா என்று பாகால் சேபூப்பின் ஆசாரியர்களிடத்தில் கேட்பதற்காக ஆட்களை அனுப்பினார். இது கர்த்தருக்கு அவமானமாக, ஒருவேளை வெளியரங்கமான அவமானமாக இருந்தது. இஸ்ரவேல் ஏற்கனவே மாபெரும் வைத்தியரைக் கொண்டிருந்தது, அவர் ஒருவரே அகசியாவின் சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய நோய்களைக் குணமாக்கக் கூடியவராக இருந்தார்.

> கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரி யாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? ... என்பதை அவர்களோடே சொல் என்றான் (வசனங்கள் 3, 4அ).

KJV வேதாகமத்தில், ''இஸ்ரவேலிலே தேவன் *இல்லையென்பதற்காக அல்லவா*'' என்றுள்ளது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). அது அருவருப்பானதாக

*உள்ளது, ஆனால் மூலவசனம் அவ்வாறே வாசிக்கப்படுகிறது. வலியுறுத்தம் தருதல் என்பதே இரு எதிர்மறைச் சொற்களின் நோக்கமாக உள்ளது: "நீங்கள் இஸ்ரவேலில் தேவன் இல்லை, இல்லை, ஒருவரும் இல்லை என்று கூறுகிறீர்கள் எனவே நீங்கள் எக்ரோனுக்குச் செல்ல வேண்டியதாயிற்று!"*

*எலியா, அகசியாவின் கேள்விக்குப் பதில் அளிக்கவிருந்தார்: "இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் 4அ). "இதினிமித்தம்" என்ற வார்த்தை, விஷயங்கள் மாறுபட்டிருந்தால், அரசர் யெகோவாவினிடத்தில் விசாரித்திருந்தால், மனம்வருந்துதல் இருந்திருந்தால், அவரது உடல்நலம் சீராக்கப்பட்டிருக்கும்- ஆனால் அவரது இருதயக் கடினத்தினிமித்தம் அவர் சாவார் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது.*

*கர்த்தருடைய தூதன் கூறியபடியே எலியா செய்தார் (வசனம் 4ஆ).*

*அகசியா, தீர்க்கதரிசியை அச்சுறுத்த முயற்சி செய்தார். "அந்த ஆட்கள் அவனிடத்திற்குத் [அகசியாவினிடத்திற்குத்] திரும்பிவந்தபோது: நீங்கள் திரும்பி வந்தது என்ன என்று அவன் அவர்களிடத்தில் கேட்டான்" (வசனம் 5). அந்த ஆட்கள் எக்ரோனுக்குச் செல்லுமளவுக்கு நீண்டதூரம் செல்லாது திரும்பி வந்தனர். அவர், "என்ன நடந்தது?" என்று கேட்டார்.*

> *அதற்கு அவர்கள்: ஒரு மனுஷன் எங்களுக்கு எதிர்ப்பட்டுவந்து: நீங்கள் உங்களை அனுப்பின ராஜாவினிடத்தில் திரும்பிப்போய், இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறாய்; இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவனோடே சொல்லுங்கள் என்றான் என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு எதிர்ப்பட்டுவந்து, இந்த வார்த்தைகளை உங்களிடத்தில் சொன்ன மனுஷன் எப்படிப்பட்டவன் என்று கேட்டான் (வசனங்கள் 6, 7).*

*அதற்கு அவர்கள், "அவன் மயிர் உடையைத் தரித்து,[8] வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்தான்" என்று பதில் அளித்தனர். அவர் யார் என்பதை அவர்கள் அறிந்திருந்தால், அவர்கள் அதைப்பற்றி ஊமையாக நடித்தல் சூழ்நிலைக்குப் பொருத்தமானது என்று நினைத்தனர். அகசியா, "அது திஸ்பியனாகிய எலியாதான்" என்று கூறினார் (வசனம் 8). செயல்விளைவில் அவர் கூடுதலாக, "எனவே அந்தப் பழைய போக்கிரி இன்னமும் சுற்றித் திரிகிறான். ஐந்து அல்லது அதற்கு சற்றேறக் குறையலான ஆண்டுகளாக நான் அவனைப் பற்றிக் கேள்விப்படவில்லை. ஒருவேளை அவன் இறந்திருப்பான் என்று நான் நினைத்தேன். ஆனால் இங்கு அவன் மறுபடியும் தனக்குத் தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைக்கிறான்" என்று கூறினார்.*

*இது மனந்திரும்புவதற்கு அகசியாவுக்குத் தேவனால் தரப்பட்ட இன்னொரு வாய்ப்பாக இருந்தது. தேவனுடைய செய்தியாளர் தேவனுடைய செய்தியோடு அனுப்பப்பட்டிருந்தார், மற்றும் அந்த செய்தியானது எல்லாக்காரியத்திலும் மிகவும் பயங்கரமானதான மரணம் பற்றியதாக இருந்தது. அது ஒரு நபரை நிதானித்து நினைக்கச் செய்யவில்லை என்றால் வேறெதுவும் அவ்வாறு செய்யாது. இம்முறை அது அந்தச் செயல்விளைவைக்*

*கொண்டிருக்கவில்லை. காண்கிறபடி, அது அகசியாவைக் கோபம் கொள்ளச் செய்தது, அவ்வளவுதான். "அவனிடத்திற்கு [எலியாவினிடத்திற்கு] ஒரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினான்; மலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிற அவனிடத்தில் [எலியாவினிடத்தில்] இவன் [தலைவன்] ஏறிப்போய்" (வசனம் 9அ). "யாரேனும் ஒருவர் இறப்பார், ஆனால் அது நானாக இருக்கமாட்டேன்" என்று அரசர் கூறினார்!*

## வடக்கு இஸ்ரவேலின் வல்லமை நிறைந்த தீர்க்கதரிசி (1:9-17)

*அவர்கள் முதியவராகிய எலியாவைக் கண்டபோது, "அவர் மலையின் உச்சியில் அமர்ந்து இருந்தார்" (வசனம் 9ஆ). அவர் "முதியவரான எலியாவாக" இருந்தார். ஏனென்றால் பல ஆண்டுகள் கடந்து சென்றிருந்தன. அவர் யேசபேல் மற்றும் ஆகாப் ஆகியோருடன் இருபது அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகள் போராடியிருந்தார். இப்போது யேசபேல் மற்றும் அவளது மகன் அகசியா ஆகியோருடன் அவருக்குப் போராட்டம் இருந்தது. எலியா முதியவராகி இருந்தார். நயப்பாங்கற்ற அவரது தலை மற்றும் நீண்டு தொங்கிய தாடி ஆகியவற்றின் முடியில் நரை இழையோடி இருந்தது. அவர் நேராக நிமிர்ந்து நிற்கவில்லை. அவர் அனேகமாக இப்போது அரசரின் இரதத்துடன் ஓட இயலாதவராக இருந்தார். அவர் மலையின் உச்சியில் அமர்ந்திருந்த முதிய மனிதராக, இந்த உலகத்தை விட்டுச் செல்லத் தயாரானவராக இருந்தார் (காண்க அதிகாரம் 2). இருப்பினும், அவருக்காக வருத்தப்பட வேண்டாம். அவர் இன்னமும் வல்லமை நிறைந்த தீர்க்கதரிசியாகவே இருந்தார். அவர் இன்னமும் இஸ்ரவேலில் தேவனுடைய மனிதராகவே இருந்தார். அவர் இன்னமும் தேவனுடைய "ஒரு ஆள் சேனையாக" இருந்தார். அவர் இன்னமும் அக்கினியின் மனிதராக இருந்தார்.*

*வடக்கு இஸ்ரவேலின் வல்லமை நிறைந்த தீர்க்கதரிசியினுடைய மூன்று பண்புகளை நாம் கவனிப்போம்.*

*நாம் கண்டுள்ளபடி எலியா, தேவனுடைய சித்தத்தை அறியச் செய்தார். இந்த வேளையில் [எலியா] எங்கு வாழ்ந்தார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் தேவன் பேசியபோது, அவர் போவதற்குத் தயாராக இருந்தார். தூதன் அவரிடத்திற்கு வந்து அவர் அளிக்க வேண்டிய செய்தியை அவருக்குக் கொடுத்தார். அவர் அதை அளித்தார். அது அவரது வாழ்வைப் பற்றித் தொகுத்து உரைக்கிறது:*

*எலியா தேவனுடைய ஊழியத்தைச் செய்தார்:*

> *இவன் [தலைவன்] எலியாவினிடத்தில், தேவனுடைய மனுஷனே,[9] ராஜா உன்னை வரச்சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எலியா, அந்த ஐம்பதுபேரின் தலைவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது (வசனங்கள் 9இ, 10).*

கர்மேல் மலையில் நடந்தது போலவே, வானத்திலிருந்து அக்கினி மீண்டும் இறங்கியது. அந்த முதிய மனிதர் இன்னமும் தொடுதலைக் கொண்டிருந்தார்! யோசிப்பஸ் என்பவர், இந்த அக்கினி மின்னலாக இருந்தது என்று கூறினார்.[10] அது என்னவாக இருந்தாலும், அது பூமியின்மீது தீயில் கருகிய ஐம்பத்தியோரு இடங்களை எஞ்சவிட்டது, அந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மனிதர் இருந்திருந்தார்.

அரசர் தமது பாடத்தைக் கற்றுக்கொண்டாரா? இல்லை, அவர் இன்னும் ஐம்பத்தியோரு பேர்களை அனுப்பினார். எஞ்சியிருந்த பிணக்குவியல் களிடத்தில் தீர்க்கதரிசியை சந்திக்க இந்தத் தளபதி வந்து நின்றதைச் சித்தரித்துக் கொள்ளுங்கள், அவர் சாம்பலாக எஞ்சியவற்றினூடே முன்னெச்சரிக்கையுடன் அடியெடுத்து வைத்துச் சென்றார். ஒருவேளை அவர், "தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னைச் 'சீக்கிரமாய் வரச்சொல்லுகிறார்' " (வசனம் 11) என்று வற்புறுத்துவதற்கு முன், எச்சிலை விழுங்கி இருக்கலாம். "சீக்கிரமாய்" என்ற வார்த்தை கூட்டப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். "அரசருக்கு மதியீனம் போதுமானதாய் இருக்கிறது," "உடனே கீழே இறங்கி வாருங்கள்!" என்று தலைவர் கூறினார்.

> எலியா அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது (வசனம் 12).

கூடுதல் விபரத்தின் இந்தத் துணுக்கு ஒன்றைக் கவனியுங்கள்: "உடனே *தேவனுடைய* அக்கினி வானத்திலிருந்து இறங்கி." பல விஷயங்களுக்காக - எடுத்துக்காட்டாக, பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர்களைக் *கொலை* செய்ததற்காக - எலியாவை எழுத்தாளர்கள் கண்டனம் செய்திருக்கின்றனர், செய்கின்றனர், ஆனால் அவர்கள் இந்த 102 போர்வீரர்களின் மரணத் திற்காக அவரை விசேஷமாகக் கண்டனம் செய்கின்றனர். "அவர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மாத்திரமே செய்தனர்" என்று ஒருவர் கூறுகிறார். பரலோகத்தில் இருந்து இறங்கி வந்து இது *எலியாவின்* அக்கினியல்ல ஆனால் *தேவனுடைய* அக்கினி என்பது கவனிக்கப்படட்டும். நாம் தேவனைக் கடிந்துரைக்க முயற்சி செய்யக் கூடாது. எலியா *தேவனுடைய* ஊழியத்தைச் செய்துகொண்டிருந்தார்.

விக்கிரகாராதனையையும் அத்துடன் இணைந்து சென்ற ஒவ்வொரு விஷயத்தையும் தேவன் வெறுத்தார் என்று முந்திய பாடங்கள் வலியுறுத்தியுள்ளன. யூதர்கள் அவருடைய விசேஷித்த மக்களாக இருந்தனர். பொய்யான கடவுள்களை ஆராதிப்பதில் இருந்து ஏதாவது ஒரு குழு விடுதலை ஆகியிருந்தது என்றால், அது இஸ்ரவேல் மக்களினமாகத் தான் இருக்க வேண்டும். இருப்பினும் வடக்கு இராஜ்யத்தினுள், விக்கிரகாராதனை என்ற விஷயமானது யெரோபெயாமின் செல்வாக்கினால் வந்து தொடர்ந்து பரவியது. யேசபேல் அரசியாகி, பாகால் மற்றும் ஆஷேரா (பாகாலின் பெண் இணை) ஆகிய கடவுள்களை ஆராதித்தலை அறிமுகப்படுத்தியது என்பது கடைசி வைக்கோலாக இருந்தது. யேசபேல்,

பாகாலை ஆராதித்தலையும் யெகோவாவை ஆராதித்தலையும் ஒரேசமயத்தில் அனுமதித்தல் என்பதை விரும்பவில்லை. நாட்டில் இருந்து யெகோவாவிற்குச் செய்யப்படும் ஆராதனையை நீக்கிப்போடுதல் என்பதை அவள் தனது இலக்காக ஏற்படுத்தினாள்.

ஒரு பயங்கரமான புற்றுநோய் நாடுமுழுவதிலும் பரவியது. யேசபேலும் அவளது பணிவிடைக்காரிகளும் ஆஷேராவின் கோவில்களில் ஒழுக்கவீனத்தின் மிகவும் வெறுக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். சமாரியாவுக்கு அருகில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சியில், ஆஷேராவின் (அல்லது ஆசரோத்தின்) கோவிலினுடைய எஞ்சிய சிதிலங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. கோவிலின் நுழை வாயிலில் இருந்து ஒருசில தப்படிகள் தூரத்தில், ஒரு கல்லறை உள்ளது. அந்தக் கல்லறை, ஜாடிகளினால் நிரப்பப்பட்டுள்ளது, அவற்றில் கோவிலில் பலியிடப்பட்ட பச்சிளம் குழந்தைகளின் எஞ்சிய உடல்பாகங்கள் இருக்கின்றன. பாகால் மற்றும் ஆஷேராவின் பெண் ஆசாரியர்கள் சிறுகுழந்தைகளைக் கொல்வதற்கென்று அலுவலகரீதியாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த புற்றுநோயை அழிப்பதற்கென்று தேவன் எலியாவை அனுப்பியிருந்தார். முன்பே கவனிக்கப்பட்டபடி, ஒரு மனிதர் தமது வயிற்றில் வேகமாய் வளர்ந்து வரும் புற்றுநோய்க்கட்டியைக் கொண்டுள்ளார் என்று அவரிடத்தில் ஒரு மருத்துவர் கூறுகிறார் என்றால், அவர் “நாம் ஒரு சிறு அறுவைச் சிகிச்சை செய்து அந்தக் கட்டியில் ஒருசிறு பாகத்தை வெளியே எடுத்து, என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்று கூறமாட்டார். இல்லை! மருத்துவர், அந்த *முழு* கட்டியையும் அதைச் சுற்றி உள்ள பாதிக்கப்பட்ட *எல்லா* திசுவையும் எடுக்கிறார் - மற்றும் அவர் எல்லாவற்றையும் எடுத்தாக வேண்டும் என்று கேட்கிறார்.

நியாயப்பிரமாணத்தின்படி, விக்கிரகாராதனைக்காரர்களை, குறிப்பாக அவர்களின் தலைவர்களைக் கொல்லுதல் என்பது அரசரின் பொறுப்பாக இருந்தது. ஆகாப் அரசர் தமது இந்தப் பணியைச் செய்யாதபடியால், தேவன் எலியாவை அனுப்பினார்.

2 இராஜாக்கள் 1ம் அதிகாரத்தின் விஷயமானது இன்னொரு மறுப்பை எழுப்புகிறது: “ஆனால் இந்த மனிதர்கள் கட்டளைகளை மாத்திரமே நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். தனிப்பட்ட வகையில் அவர்கள் இந்த விஷயத்திற்குப் பொறுப்புள்ளவர்கள் அல்லவே.” அந்தப் பாதுகாப்பு வாதம் ஓரளவு மதிப்புடையதாக உள்ளது, ஆனால் ஒரு குறிப்பிட்ட இடம் வரையில் மாத்திரம் அவ்வாறு உள்ளது. மனிதர்களிடத்தில் விகாரமான பரிசோதனைகளை நடத்திய நாஜி இராணுவத்தின் அறிவியல் அறிஞர்களுடைய தற்பாதுகாப்புவாதமும் இவ்வாறே இருந்தது. யூதமக்களைப் பல ஆயிரக்கணக்கில் கொன்று குவித்த நாஜிப்படைத் தலைவர்களின் தற்காப்புவாதமும் இவ்வாறே இருந்தது. இந்த உலகத்தின் நீதிமன்றங்கள், இராணுவக் கட்டளைகளுக்கு முன்னதாகச் செல்லவேண்டியதான நாகரிகத்தின் அடிப்படையில் கட்டயெழுப்பப்பட்ட அடிப்படை ஒழுக்கக் கோட்பாட்டை ஆணையிட்டுள்ளன.

> [அகசியாவினால் அனுப்பப்பட்டிருந்த மனிதர்கள்] என்ன செய்திருக்க வேண்டும்? அவர்கள், நோப் என்ற இடத்தில் ஆசாரியர்களைக்

கொல்லும்படி கட்டளைபெற்ற சவுலின் பாதுகாவலர்களைப் போல செயல்பட்டிருக்க வேண்டும். அந்தக் கட்டளை தேவனுடைய சித்தத்திற்கு எதிரானது என்று அறிந்த அவர்கள் அதற்குக் கீழ்ப்படிய மறுத்தனர்!

தேவனுடைய பார்வையில் துன்மார்க்கமானதை மற்றும் பாவம் நிறைந்ததைச் செய்வதில், அலுவலர்கள் மற்றும் போர்வீரர்கள் ஆகியோரின் தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் கட்டளைகள் தங்களை நியாயப்படுத்தமாட்டாது என்பதை அவர்கள் அறிய வேண்டும்.[11]

இஸ்ரவேல் தேவனால் ஆளப்பட்ட நாடாக இருந்தது என்பதைச் சிந்தையில் வைக்கவும். யெகோவா தேவனே இஸ்ரவேல் இராணுவத்தின் பிரதான தளபதியாக இருந்தார். அவரிடத்தில் இருந்து வந்த எந்தக் கட்டளையும் (அரசர் உட்பட). எந்த ஒரு கீழ்நிலை அதிகாரியிடத்தில் இருந்து வந்திருக்கக்கூடிய எந்த ஒரு கட்டளையையும் முந்தியிருக்க வேண்டியதாயிற்று. தேவனுடைய தீர்க்கதரிசியை "உயிருடனோ அல்லது பிணமாகவோ" கொண்டுசெல்ல வந்திருந்த, ஆயுதம் தரித்த இஸ்ரவேலர்கள் இதைப்பற்றி அரிதாகவே அறிந்திருந்தனர். எலியா ஒன்றுமறியாதவர்கள் பலரைக் கொன்றிருக்கவில்லை; அவர் நரகத்தின் சேனைத்திரளுக்கு எதிராக நின்றிருந்தார் - மற்றும் அவர் தேவனுடைய பலத்தினாலும் வல்லமையினாலும் வெற்றிபெற்றிருந்தார்.

கடைசியாக 13ம் வசனத்தில் அறிவுணர்வுள்ள ஒரு படைத்தலைவர் காணப்படுகிறார்: "[அரசன்] திரும்பவும் மூன்றாந்தரம் ஒரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினான்." இந்த படைத்தலைவர், தேவனுடைய வல்லமையை நினைவூட்டும் 102 சாம்பல் குவியல்களினூடே ஜாக்கிரதையாக நடந்து சென்ற நிகழ்ச்சியைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் எலியா இருக்குமிடத்தைச் சென்று சேர்ந்தபோது, அவர் முழங்காற்படியிட்டுப் பின்வருமாறு வேண்டிக்கொண்டார்:

"தேவனுடைய மனுஷனே, என்னுடைய பிராணனும், உமது அடியாராகிய இந்த ஐம்பதுபேரின் பிராணனும் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக. இதோ, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, முந்தின இரண்டு தலைவரையும், அவரவருடைய ஐம்பது சேவகரையும் பட்சித்தது; இப்போதும் என்னுடைய பிராணன் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக என்றான்" (வசனங்கள் 13ஆ, 14).

"என்னுடைய பிராணன் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக" என்பது "தயவுசெய்து என்னை உயிர்பிழைக்க விடுங்கள்!" என்று அர்த்தமாகிறது.

"அப்பொழுது கர்த்தருடைய தூதன் எலியாவை நோக்கி: அவனோடேகூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றான்; அப்படியே அவன் எழுந்து அவனோடேகூட ராஜாவினிடத்திற்கு இறங்கிப்போய்" (வசனம் 15). எலியா சங்கிலியால் பிணைக்கப்பட்டோ அல்லது கட்டப்பட்டோ இருந்தாரா? நான் அதைப்பற்றிச் சந்தேகப்படுகிறேன். அவர் முன்னாக நடக்க, அந்த ஐம்பத்தியோரு வீரர்களும் மரியாதைக்குரிய தொலைவில் பின்நடந்தனர் என்று நான் அவரைப்பற்றிச் சித்தரிக்கிறேன்.

எலியா தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்தினார்:

> அவனைப் [அரசரைப்] பார்த்து: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்; ஆதலால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (வசனம் 16).

இந்தச் செய்தியானது, எலியா தம்மை அழைத்துச் செல்ல வந்த ஆட்களுக்குக் கொடுத்த அதே செய்தியாகவே உள்ளது. அதைத் தேவன் எலியாவுக்குக் கூறினார். அதை எலியா தம்மை அழைத்துச் செல்ல வந்த ஆட்களுக்குக் கூறினார். அவர்கள் அதை அரசரிடம் கூறினார்கள். இப்போது அதை எலியா அரசருக்குக் கூறினார். அது ஒரேமாதிரியாக நிலைத்திருந்தது. தேவனுடைய வசனம் மாறுவதில்லை.

எலியா தமது செய்தியை அளித்து, பின்பு கதவின் வெளியே நடந்து சென்றார் என்பது உறுதி. அவரது பொது வாழ்வு முடிந்து போயிற்று. இதுவே அவர் ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோருடன் கொண்டிருந்த கடைசித் தொடர்பாக இருந்தது. எட்டு அதிகாரங்களுக்குப் பின்பு, யேகூ யேசபேலையும் ஆகாபின் வீட்டாரையும் கொல்லுவார், ஆனால் தேவன் எதைச் செய்யும்படி எலியாவை அனுப்பினாரோ அதை அவர் செய்து முடித்திருந்தார். "தேவன் கூறுகிறபோது, அதை அவர் அர்த்தப்படுத்துகிறார்!" என்பதைத் தகவலாக அளிப்பதே அவரது கடைசிப் பணியாக இருந்தது.

தேவனுடைய வசனத்தில் நீங்கள் நிச்சயமாயிருக்க முடியுமா? 17ம் வசனத் தின் முதல் பாகத்தைக் கவனியுங்கள்: "எலியா சொன்ன *கர்த்தருடைய வார்த்தையின்படியே* அவன் இறந்துபோனான்." (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) ஆகாப் தமது மகனுக்கு, "யெகோவா உயர்த்திப் பிடிக்கும் ஒருவர்" என்று அர்த்தப்படுகிற வகையில், "அகசியா" என்று பெயரிட்டிருந்தார்; ஆனால் அவர் [அகசியா] கீழ்ப்படியாமையினால், "யெகோவா அழித்துப்போட்ட ஒருவராக" ஆனார்.

17ம் வசனத்தின் முடிவில், நாம் பின்வரும் அவலமான குறிப்பைக் கொண்டுள்ளோம்: "அவனுக்குக் குமாரன் இல்லாதபடியினால், அவன் ஸ்தானத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்தில் யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்." அகசியா பிள்ளையில்லாதவராக இறந்தார், எனவே அவரது சகோதரர் அரியணைக்கு வந்தார். இவ்வாறாக நாம் ஆகாபின் மகனுடைய குறுகிய மற்றும் வீணாகப்போன வாழ்வைப் பெற்றிருக்கிறோம்.

## ஆவிக்குரிய இஸ்ரவேலின் பகுத்தறியும் சீஷன்

மகிழ்ச்சியற்ற இந்த வரலாற்றைத் தேவன் ஏன் பதிவுசெய்தார்? நமக்குத் தேவன் தரக்கொண்டுள்ள பாடம் என்ன? நாம், "ஆவிக்குரிய இஸ்ரவேலின் பகுத்தறியும் சீஷன்" பற்றிக் கண்ணோக்குவோமாக. "ஆவிக்குரிய இஸ்ரவேல்" என்பது சபையைக் குறிக்கிறது (கலாத்தியர் 6:16; முதலியன). "சீஷன்" என்பது ஒரு கிறிஸ்தவரை, சபையின் ஒரு உறுப்பினரைக் குறிக்கிறது (காண்க நடபடிகள் 11:26). "பகுத்தறிதல்" என்பது அர்த்தங்களைப் புரிந்துகொள்ளுதல், பாடங்களைக் கண்டறிதல் மற்றும் அந்தப் பாடங்களுக்கு ஏற்றபடி வாழ்தல் என்று அர்த்தப்படுகிறது.

நிகழ்ச்சிகளின் இந்த வரிசை முழுவதிலும் ஒருபக்கமாக நின்று, நடந்த எல்லா வற்றிலும் இருந்து பாடங்களைத் தரவழைத்துக் கொள்கிற ஒரு கற்பனைப் பாத்திரத்தைத உருவகித்துக் கொள்ளுங்கள். பார்த்துக்கொண்டிருக்கும் இவர் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் என்ன? இதில் இருந்து பாடங்களை உருவகிக்க முடியும் என்று யாக்கோபும் யோவானும் நினைத்தனர் என்பது உறுதி. ஒருமுறை இயேசு எருசலேமுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, அவர் சமாரியாவின் ஒரு கிராமத்தில் இரவில் தங்கச் செய்தியாளர்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். அவர் ஒரு இரவே அங்கிருக்கப்போகிறார் என்று சமாரியர்கள் அறிந்தபோது, அவர்கள் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்து அவரை ஏற்றுக்கொள்ளக்கூடாத நிலையில் இருந்தனர். யாக்கோபும் யோவானும், "ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா" என்று கேட்டார்கள் (லூக்கா 9:54). 2 இராஜாக்கள் 1ம் அதிகாரம் அவர்களின் ஆலோசனைக்கு நிரூபணமான வசனமாக இருந்தது என்பதில் ஐயமில்லை. அவர்கள், "யாரேனும் ஒருவர் தவறுசெய்தால் அவரை அழிக்க வேண்டும்" என்பதே அந்த அதிகாரத்தின் பாடமாக இருந்தது என்று நினைத்தனர்.

> அவர் [இயேசு] திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார் (லூக்கா 9:55, 56).

இந்த வரலாற்றில் இருந்து நாம் தரவழைக்க வேண்டிய பாடம் இதுவல்ல.

இந்த நிகழ்ச்சியில் இருந்து *பல* பாடங்கள் தரவழைக்கப்பட முடியும்: கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒருவர் கர்த்தரால் பாதுகாக்கப்படுகிறார்; கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் நிறைவான வெற்றியைக் கொண்டுள்ளனர்; முதலிய பாடங்கள். நாம் மூன்று பாடங்களின் மீது கவனத்தைக் குவிப்போம்:

*பகுத்தறியும் சீஷர், தேவனுடைய வசனத்தைக் கேட்பதற்கு ஒருவர் ஒருக்காலும் முதிர் வயதானவராக இருப்பதில்லை.* எலியா வழக்கம்போலவே தேவனுடைய வசனம் அவரை வழிநடத்தும்படி ஆயத்தமாக இருந்தார். நமது வயது என்னவாக இருந்தாலும் நாம், பதில் செயல் செய்ய ஆவலுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய வசனத்தைப் படிக்க, அதைத் தியானிக்க மற்றும் அதற்குக் கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்க வேண்டும்.

எலியாவைப் போலின்றி, அகசியா யெகோவாவின் வார்த்தைகளை *விரும்பாதிருந்தார்.* அதற்கு மாறாக அவர், எக்ரோனின் வார்த்தையை விரும்பினார். துரதிர்ஷ்டவசமாக இன்றைய நாட்களில் சிலர், தேவனுடைய வசனத்தைத் தவிர வேறொரு ஆதாரமூலத்தில் இருந்து செய்தியை விரும்புகின்றனர்.

சிலர் மூடநம்பிக்கை என்ற எக்ரோனிடத்தில் செல்லுகின்றனர். பாகால் சேபூப்பின் ஆசாரியர்கள் அடிப்படையில், குறிசொல்லும் வியாபாரத்தில் இருந்தனர். எதிர்காலத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள அவசியமான யாவற்றையும் தேவன் வேதாகமத்தில் நமக்குக் கூறியுள்ளார், ஆனால் சிலருக்கு இது போதுமானதாக இருப்பதில்லை. இன்றைய நாட்களில் குறிசொல்லுதல் என்பது கைரேகை பார்த்தல், டாரட் அட்டைகள், ஜோஸியம் பார்த்தல், ஊஜா

*பலகை, ஆவிகளுடன் பேசுதல், சாத்தானியம் முதலிய - நூற்றுக்கணக்கான மாறுபட்ட வடிவங்களில் ஒரு பெரிய வியாபாரமாக உள்ளது. இன்றைய நாட்களில் அமெரிக்க நாட்டில் 10,000க்கும் அதிகமான முழுநேர ஜோஸியர்களும் 175,000 பகுதிநேரஜோஸியர்களும் வேலைசெய்கின்றனர். பெரும்பாலான செய்தித்தாள்கள் அன்றைய நாளின் ஜாதகத்தைக் கொண்டுள்ளன, மற்றும் பெரும்பான்மையான வாசகர்கள், தங்களின் "இராசிகளை" அறிந்துள்ளனர். இவற்றில் அதிகமானவை "கேளிக்கை" என்ற பெயரில் - மூடநம்பிக்கையின் உலகில் ஒன்றுமறியாத வேடிக்கையாக - செய்யப்படுகின்றன. (சற்றுக்காலத் திற்கு முன்னர் நான், அமெரிக்காவில், ஊஜா பலகையானது மானோப்போலி என்ற பிரபலமான விளையாட்டைவிட அதிகமாக விற்பனையாகும் விளையாட்டாக உள்ளது என்று வாசித்தேன்.)*

*அந்தரங்கமான வல்லமைகளோடு நாம் பொம்மைவிளையாட்டு விளையாடுகையில், நாம் அக்கினியுடன் விளையாடிக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்தறிதல் அவசியமாகும். இந்த விஷயங்கள் எவற்றுடனும் இயற்கைக்கு மேலான சக்திகள் எதுவும் தொடர்பு கொண்டிருப்ப தில்லை. அவைகள் உண்டாக்கும் முடிவு எதுவாக இருப்பினும், அவைகள் மனோதத்துவரீதியாகவோ அல்லது தற்செயலாகவோ விளக்கப்படுத்தப்பட முடியும்; ஆனால் அவற்றைக் கொண்டு நாம் பரிசோதனை செய்கிறபோது, நாம் சாத்தானுக்குக் கதவைத் திறக்கிறோம். எதிர்காலத்தைப் பற்றி எக்ரோனில் பாகால் சேபூப்பின் அசரீரி வாக்குகளைக் கலந்தாலோசித்தல் என்பது இடர்பாடற்ற விளையாட்டாக இருக்கவில்லை. பாகால் சேபூப்பைக் கலந்தாலோசித்தல் என்பது பிசாசின் உலகத்தில் ஈடுபடுதலாக இருந்தது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே இப்படிப்பட்ட செயல்பாடுகளைக் கண்டனம் பண்ணுகின்றன (காண்க லேவியராகமம் 19; உபாகமம் 18; நடபடிகள் 19). இன்றைய நாட்களில் நம்மிடத்தில் தேவன், "இஸ்ரவேலிலே தேவன் இல்லை யென்றா நீங்கள் நட்சத்திரங்கள் ... அல்லது அட்டைகள் ... அல்லது ஒரு ஊஜா பலகையிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்?" என்று கேட்பாரா?*

*சிலர், மனிதப் பகுத்தறிவு என்ற எக்ரோனிடத்தில் செல்லுகின்றனர். அறிவியலானது எல்லாப் பதில்களையும் கொண்டுள்ளது என்று அவர்கள் நினைக்கின்றனர். சிலர், உலகக் கல்வி எதிர்காலத்திற்கான திறவுகோலைக் கொண்டுள்ளது என்று நம்புகின்றனர். மனித காரண அறிவு என்பது அதன் சரியான இடத்தில வைக்கப்பட்டிருந்தால், ஒரு கருவி என்ற வகையில் மதிப்புக் கொண்டுள்ளது. இருப்பினும் ஒரு எஜமான் என்ற வகையில் கொடூரமானதாக, வஞ்சிப்பதாக மற்றும் இருதயமற்றதாக உள்ளது. "(ஆவிக்குரிய) இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள், உங்கள் பிரச்சனைகளுக்குப் பதில்களைக் கண்டறிய மனிதர்களை நோக்க வேண்டியதாக உள்ளது?"*

*மற்றவர்கள் என்ன செய்தாலும், நாம் தேவனுடைய வசனத்தைக் கவனிக்கக் கற்றுக் கொள்வோமாக.*

> உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் *அவரை* நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதிமொழிகள் 3:5, 6; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

*பகுத்தறியும் சீஷர், தேவனுக்கு எதிரானவற்றை வெறுப்பதற்கு நாம் ஒருக்காலும் மிகவும் முதிர்வயதானவர்களாக ஆவதில்லை என்பதை அறிகிறார்.* நாம் எலியாவின் வாழ்வைக் கண்ணோக்குகையில், மற்றும் துன்மார்க்கத்திற்குத் தெய்வீக தண்டனையை விசேஷமாகக் கண்ணோக்குகையில், செயல் விளைவில் உள்ள உடன்படிக்கை பற்றிப் பொருட்படுத்தாமல், பழைய உடன்படிக்கையுடன் தொடர்புடையவைகளுக்கும் சரியானது மற்றும் நித்திய மதிப்பு உள்ளது எது என்பதற்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்துதல் முக்கியமானதாக உள்ளது.

பழைய ஏற்பாட்டின்கீழ், தேவன் ஒரு குறிப்பிட்ட மக்களினத்துடன் (இஸ்ரவேலுடன்) கிரியை செய்துகொண்டிருந்தபோது, மற்றும் அந்த மக்கள் குழுவின் உயிர்வாழுதலும் தூய்மையும் மிகவும் முக்கியமானதாக இருந்தபோது - வானத்தில் இருந்து அக்கினி என்பது போன்ற - உலகப்பிரகாரமான தண்டனை என்பது காட்சியின் பகுதியாக இருந்தது. இருப்பினும் இது யாக்கோபுக்கும் யோவானுக்கும் இயேசு சுட்டிக்காண்பித்த வகையில், இப்போது உண்மையில் நிகழ்வதாக இருப்பதில்லை. பவுல், "பிரியமானவர்களே, 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்,' என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்று எழுதினார் (ரோமர் 12:19). விலகிப்போன சபையானது, பட்டயம், உலகப்பிரகாரமான தண்டனை மற்றும் பயமுறுத்துதல் ஆகியவற்றைக் கொண்டு தேவதூஷணத்தைத் துடைத்துப்போட அடிக்கடி முயற்சித்தது. பழிவாங்குதலை, அது தனது சொந்தக் கைகளில் எடுத்துக்கொண்டது தவறானதாக இருந்தது.

இது, நாம் எலியா செய்தது போல் பலமாக விசுவாசிக்கக் கூடாது, நாம் தேவனுடைய வசனத்தை நேசிக்கக் கூடாது மற்றும் தேவனுடைய வழிக்கு எதிரானதை வெறுக்கக்கூடாது, நாம் தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வழியினாலும் துன்மார்க்கத்தைத் தோல்விடையச் செய்ய உழைக்கக்கூடாது என்று அர்த்தப்படுகிறதா? இல்லை! இயேசு செய்தது போலவே நீதியை நேசித்து அக்கிரமத்தை வெறுத்தல் என்பதே நமது அறைகூவலாக உள்ளது (எபிரெயர் 1:9). நாம், பாவிகளை நேசித்து, மனிதர்களுக்கு உதவக் கற்றுக்கொள்வோமாக, ஆனால் அத்துடன் நாம், தவறானவற்றுடன் உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ள முடியாது என்பதையும் கற்றுக்கொள்வோமாக!

*பகுத்தறியும் சீஷர், தேவனுடைய சித்தத்தைச் செய்யத் துரிதப்படுவதற்கு ஒருவர் ஒருக்காலும் முதிர்வயதானவர் ஆவதில்லை என்பதைக் கற்றுக்கொள்கிறார்.* "முதிய" எலியாவின் வரலாறு குறுகியதாகவும் தன்னில் ஒருசில காட்சிகளையே கொண்டதாகவும் உள்ளது, ஆனால் எலியா இன்னும் தேவனுக்கென்று ஆயத்தமான ஊழியக்காரராக இருந்தார், இன்னும் அவர் தேவனுடைய அரியணைக்கு முன்பாக நின்று எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி அவரது [தேவனுடைய] சித்தத்தைச் செய்யத் தயாராக இருந்தார் என்பது தெளிவாக உள்ளது. ஆண்டுகள் பல கடந்திருந்தாலும் அவர் தமது வாழ்வின் முடிவை நெருங்கியிருந்தாலும், இதுவே உண்மையானதாக இருந்தது.

நமது நாட்களில் உள்ள கோட்பாடுகளில் ஒன்று, "சபையின் முதிர்வயது" என்று அழைக்கப்படுகிறது. மக்கள் ஆரோக்கியமானவர்களாகவும் அதிக நாள் வாழ்பவர்களாகவும் உள்ளனர். அவர்கள் ஓய்வுபெற்றபின்பு அதிகம் நன்மையான ஆண்டுகளைக் கொண்டுள்ளனர். அவர்களை "களைப்பற்ற ஓய்வு பெற்றவர்கள்"

என்று ஒருவர் அழைத்துள்ளார். சமூகவியலாளர்களால், OPALS (*O*lder *P*eople with an *A*ctive *L*ifestyle) அதாவது, "செவாமும" - செயல்துடிப்பான வாழ்வு நடை கொண்ட முதிர்வயது மக்கள் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இந்த பக்குவம், திறமை மற்றும் சக்தியானது கர்த்தருக்கென்று கட்டுப்படுத்தக்கூடும் மென்றால் என்ன ஒரு நன்மைக்கான விசை நிலவும்! தேவனுக்கு ஊழியம் செய்தல் என்பது இளைஞர்களுக்குரிய வேலையாக மாத்திரம் இருப்பதில்லை; அது நம் எல்லாருக்குமானதாக உள்ளது.

வேதாகமத்தின் மாபெரும் வீரர்களில் சிலர், இந்த வரலாற்றில் வரும் எலியாவைப் போன்று மதிக்கத்தக்க வயதுடைய தனிநபர்களாக இருந்தனர். எலியா, சங்கீதம் 71:17, 18ன் ஆவியை உள்வாங்கி இருந்தார்:

> தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன். இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிரு முள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக.

மோசே தேவனுடைய இன்னொரு OPALS ஆக இருந்தார். இஸ்ரவேல் மக்களை அடிமைத் தளையில் இருந்து விடுவித்து நடத்தியபோது மோசே 80 வயதுள்ளவராக இருந்தார் - மற்றும் அந்தப் பயணம் முடிந்தபோது அவர் 120 வயதுடையவராக இருந்தார். தானியேல் சிங்கக் குகையில் இருந்தபோது ஒரு இளையவராக அடிக்கடி சித்தரிக்கப்பட்டுள்ளார், ஆனால் அவரது வாழ்வின் கால அட்டவணையை ஆராய்ந்து பாருங்கள்! அவர் சிங்கக் குகையில் தூக்கியெறியப்பட்டபோது, அவர் ஒரு முதிர்வயதான மனிதராக இருந்தார். அவர் [தானியேல்] தமது வாழ்நாள் முழுவதிலும் தேவனுக்காக எழுந்து நின்றபின், தைரியமும் முதுகெலும்பும் தவிர வேறு எதுவும் அவரது உடலில் எஞ்சியிருக்கவில்லை என்பது சிங்கங்கள் அவரை உண்ணாதிருக்கக் காரணம் என்று ஒருவர் நகைச்சுவையாகக் கூறியுள்ளார்.

தேவனுடைய ஊழியத்தில் தங்களை ஒப்புக்கொடுத்துள்ள முதிர் வயதானவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றிசெலுத்த வேண்டும். அவர்கள் நமக்கு என்ன ஒரு மெய்சிலிர்க்கச் செய்யும் உதாரணமாக உள்ளனர்![12] நமது வயது என்னவாக இருந்தாலும், நாம் யாவரும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குத் துரிதப்படக் கற்றுக்கொள்வோமாக.

## முடிவுரை

சிலர், நாம் படித்துள்ள இந்த வரலாறு பழைய ஏற்பாட்டில் இருப்பதால், அதில் அக்கினி உள்ளது, மற்றும் இன்றைய நாட்களில் அப்படிப்பட்ட விஷயம் எதுவும் இருப்பதில்லை என்று கூறுகின்றனர். உலகப்பிரகாரமான தண்டனை என்பது சபைக்கான தேவனுடைய மாதிரியில் ஒரு பாகமாக இராதிருக்கலாம், ஆனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். அக்கினி என்பது தேவனுடைய திட்டத்தில் இன்னமும் ஒரு பாகமாகவே உள்ளது, மற்றும் கர்த்தர் நியாயத்தீர்ப்பில் வரும்போது, தேவபக்தியற்றவர்கள் மேல் அது விழும்!

*தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு. கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:7-10).*

குறைந்தபட்சம் நாம், ஐம்பதுபேர்கொண்ட மூன்றாவது குழுவின் தலைவனைப்போல் ஞானமுள்ளவள்ளவர்களாக இருப்போமாக. அவர், தமக்கு முன்சென்ற 102 பேர்களின் எஞ்சிய சாம்பலினூடே தமது வழியில் கடந்து செல்லுகையில், தேவனுடைய மனிதரின் இரக்கத்திற்குத் தம்மை அர்ப்பணித்தலே தமது ஒரே நம்பிக்கையாக இருந்தது என்பதை அவர் உணர்ந்தறிந்தார் மற்றும் அவருக்கு இரக்கம் காண்பிக்கப்பட்டது.

இயேசு அழிப்பதற்கல்ல ஆனால் இரட்சிப்பதற்கே வந்தார். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அவர் உங்களுக்காகவும் எனக்காவும் மரித்தார். இருப்பினும் அவர், "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் <u>மனந்திரும்பாமற்போனால்</u> எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்றும் கூறினார் (லூக்கா 13:3; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நீங்கள் உங்களைச் சிலுவையின் அடியில் கிடத்தி, "கர்த்தாவே, நான் மனந்திரும்புகிறேன். நான் எனது வழியை மாற்றிக்கொள்வேன். நான் உமது சித்தத்தைச் செய்ய விரும்புகிறேன். தயவுகூர்ந்து உமது கண்களில் எனது ஜீவன் விலையேறப் பெற்றதாக இருப்பதாக" என்று கதறமாட்டீர்களா?

---

குறிப்புகள்

[1]இது யூதர்களின் காலக்கணக்கின்படியானதாகும், இக்கணக்கு ஒரு பகுதியை முழுமையானதாக எடுத்துக்கொள்வதாக இருந்தது. நமது கணக்கின்படி, அவர் ஒரு ஆண்டிற்கும் சற்று அதிகமான காலம் அரசாண்டார். [2]1 மற்றும் 2 இராஜாக்களின் புத்தகங்கள் தொடக்ககாலத்தில் ஒரே புத்தகமாக இருந்தன என்பதை நினைவில் வையுங்கள். அவைகள் இந்தப் புத்தகத்தை இரண்டு தோல் சுருள்களில் வைத்தல் என்பது மிகவும் வசதியாக இருந்தது என்று கண்டறிந்த செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பாளர்களால் பிரிக்கப்பட்டன. பிரித்தல் எவ்விடத்தில் வந்தது என்பது பற்றி அதிகம் சிந்திக்காமலேயே அவர்கள் இதைச் செய்தனர் என்பது உறுதி. [3]இது ஏறக்குறைய தாவீதின் காலத்தில் இருந்தே நடந்து வந்தது (2 சாமுவேல் 8:2). [4]இரண்டு இராஜாக்கள் 3:4-27 வசனங்கள் இந்தக் கலகத்தைப் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றைத் தருகிறது. [5]இப்படிப்பட்ட உரிமைகோருதலை ஏற்படுத்தும் எந்த ஒரு நபரும் தமது அறியாமையைக் காண்பிக்கிறார். [6]இது வில்லியம் G. கோல்டிங் என்பவரால் எழுதப்பட்டது. [7]உங்கள் விரல்களைக் கொண்டு அதன் அளவைச் சுட்டிக்காண்பியுங்கள். [8]இது அவரது உடல் அமைப்பை

அல்லது அவரது உடைகளைக் குறிப்பிடுவதாக இருக்கக்கூடும். காண்க சகரியா 13:4; மத்தேயு 3:4. [9]அவன், எலியாவை "தேவனுடைய மனிதனே" (இது தீர்க்கதரிசிக்குக் குறிப்புப் பெயர்களில் ஒன்றாக இருந்தது) என்று அழைத்ததில் உண்மையுள்ளவனாக இருந்தானா அல்லது அவன் அதை ஒரு உறுமலுடன் கூறினானா? அனேகமாகப் பிந்தியதாகவே இருக்கலாம். [10]அது சாதாரண மின்னலாக இருக்கவில்லை என்பது உறுதி. மின்னல் மக்களைக் கொல்லக்கூடும், ஆனால் அது அவர்களைப் "பட்சித்தது" என்று நாம் சாதாரணமாகக் கூறமாட்டோம்.

[11]Josephus, *The Life and Works of Flavius Josephus*, trans. William Whiston (Philadelphia: John C. Winston Co., 1957), 277, n. [12]நீங்கள் குறிப்பான உதாரணங்களைத் தர விரும்பலாம்.

## காட்சி - உதவி குறிப்புகள்

இந்தப் பாடத்தின் முதல் பகுதிமுழுவதிலும் காட்சிப்படுத்துவதற்குப் பெரிய அட்டை ஒன்றைத் தயாரித்து அதில் பின்வருமாறு எழுதுங்கள்: "நான் மிகவும் முதியவன் என்று யார் சொல்வது?" இந்தப் பாடத்தின் கடைசிப் பகுதிக்கு, மூன்று அட்டைகளில் பின்வரும் வார்த்தைகளை எழுதுங்கள்: "தேவனுடைய வசனத்தைக் கவனித்தல்," "தேவனுக்கு எதிரானவற்றை வெறுத்தல்," மற்றும் "தேவனுடைய சித்தத்தைச் செய்யத் துரிதப்படுதல்."

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. 2 இராஜாக்கள் 1ம் அதிகாரம், எலியாவின் வாழ்வில் சார்பளவில் சிறியதொரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது.
   1. நாம் அதிகாரம் 1ஐத் தவறவிட்டால் நமது பாடத்தொடர் முழுமையற்றதாகிவிடும்.
   2. இங்குள்ள சில பாடங்கள் எலியாவைப் பற்றிய மற்ற வசனப்பகுதிகளில் காணப்படுவதில்லை.
   3. சில தளர்வான நுனிகளை நாம் இறுக முடிவது அவசியமாகும்.

B. நாம் மூன்று தனிநபர்களைக் கண்ணோக்குவோம். இவர்களில் இருவர் நமது வசனப் பகுதியில் காணப்படுகின்றனர். மூன்றாமவர் நமது பிரசங்கத்தைக் கேட்பவர்களில் இருக்கிறார்.

I. வடக்கு இஸ்ரவேலின் கலகக்கார ஆட்சியாளர் (1:1-9)

A. இந்தக் கலகக்கார ஆட்சியாளர் ஆகாப் அல்ல, ஆனால் அவரது மகனான அகசியா ஆவார் (1 இராஜாக்கள் 22:37, 38, 40). அகசியாவைப் பற்றிய மூன்று விஷயங்களைக் கவனியுங்கள்:
   1. அவர் கடந்தகாலத்தைப் புறக்கணித்தார் (1 இராஜாக்கள் 22:51 - 2 இராஜாக்கள் 1:1).
      a. அகசியா, கடந்த காலத்திலிருந்தும் எலியாவைப் பற்றிய வரலாற்றில் இருந்தும் பாடம் கற்றிருக்க வேண்டும், ஆனால் அவர் ஒன்றும் கற்றுக் கொண்டிருக்கவில்லை

என்பது உறுதி (1 இராஜாக்கள் 22:51-53).

b. அவர் தமது ஆட்சியைத் தொடங்கியபோது, பிரச்சனைகள் எழும்பின (2 இராஜாக்கள் 1:1). இருப்பினும் ஏவுதல் பெற்ற எழுத்தாளர், அகசியாவின் குறுகிய ஆட்சிக் காலத்தின் முடிவில் நடைபெற்ற ஒரே ஒரு நிகழ்ச்சியின் மீதே முக்கியமாக அக்கறை செலுத்தினார்.

2. அவர் மாபெரும் வைத்தியரை அவமதித்தார் (2 இராஜாக்கள் 1:2-4).

a. அகசியா ஒரு ஜன்னலில் இருந்து வெளியே விழுந்து படுகாயமடைந்தார் (வசனம் 2). ஒருவேளை இது அவரை யெகோவாவினிடத்தில் திரும்பக் கொண்டு வருவதற்காக நடந்திருக்கலாம் (சங்கீதம் 119:71). அதற்குப் பதிலாக அவர், தாம் குணமடைவாரா என்று கேட்பதற்குப் பாகால் சேபூபினிடம் கேட்பதற்கு ஆட்களை அனுப்பியதன்மூலம், மாபெரும் வைத்தியரை அவமதித்தார் (வசனம் 2).

(1) “பாகால்சேபூப்” என்றால் “ஈக்களின் ஆண்டவன்” என்று அர்த்தப்படுகிறது - இவன் எரிச்சல் மூட்ட அல்லது எரிச்சலின் ஆதாரமூலத்தை நீக்கிப்போடத் திறனுள்ளவனாக இருந்தான்.

(2) பாகால்சேபூப் குணமாக்குதலுடன் இணைவு கொண்டிருந்தான் (மத்தேயு 12:22-28ஐக் கவனிக்கவும்).

b. அகசியா குணமடையமாட்டார் என்று அந்த ஆட்களிடம் கூறுவதற்காகத் தேவன் எலியாவை அனுப்பினார் (வசனங்கள் 3, 4; இதில் அகசியா மனம் திரும்பி அவரிடத்தில் வராததால் குணமடையமாட்டார் என்ற கருத்து மறைமுகமாக உணர்த்தப்படுகிறது).

3. அவர் தீர்க்கதரிசியை அச்சுறுத்த முயற்சி செய்தார். (2 இராஜாக்கள் 1:5-9)

a. என்ன நடந்தது என்பதை அந்த ஆட்கள் அரசரிடத்தில் கூறியபோது, அவர் அதை கூறியது எலியாதான் என்பதை உடனடியாக அறிந்தார் (வசனங்கள் 5-8).

b. அவர், எலியாவைக் கூட்டிக் கொண்டுவரும்படிக்கு, ஐம்பது வீரர்களுடன் ஒரு தலைவனை அனுப்பினார் (வசனம் 9).

B. இது அகசியா மனந்திரும்புவதற்குத் தேவனால் தரப்பட்ட ஒரு வாய்ப்பாக இருந்தது. மரணம் பற்றிய செய்தியொன்று ஒரு நபரை நிதானித்து நினைக்கச் செய்யவில்லை என்றால், வேறு எதுவும் அதைச் செய்யாது. அதற்குப் பதிலாக, அகசியா கோபம் அடைந்தார்.

II. வடக்கு இஸ்ரவேலின் வல்லமை நிறைந்த தீர்க்கதரிசி (1:9-17).

எலியா முதிர் வயதானவராக இருந்தார், ஆனால் அவர் இன்னமும் இஸ்ரவேலில் தேவனுடைய மனிதராக இருந்தார். அவரைப் பற்றிய மூன்று விஷயங்களைக் கவனியுங்கள்:

A. அவர் தேவனுடைய சித்தத்தை அறியச் செய்தார் (வசனங்கள் 3, 4).

B. அவர் தேவனுடைய ஊழியத்தைச் செய்தார் (வசனங்கள் 9-15).

1. அந்த ஐம்பத்தியோரு மனிதர்களை அக்கினி பட்சித்தது (வசனங்கள் 9, 10).
2. அகசியா இன்றும் ஐம்பத்தியோரு பேர்களை அனுப்பினார், அவர்களையும் அக்கினி பட்சித்தது (வசனங்கள் 11, 12). இந்த முறை இது, "*தேவனுடைய* அக்கினி" என்பது வலியுறுத்தப்படுகிறது. எலியா தேவனுடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தார்.
3. கடைசியாக, நல்லறிவு கொண்ட ஒரு தலைவன் அனுப்பப்பட்டான், அவன் காப்பாற்றப்பட்டான் (வசனங்கள் 13, 14). அவனுடனே எலியா அரசரிடம் சென்றார் (வசனம் 15).

C. அவர் தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்தினார் (வசனங்கள் 16, 17).

1. அரசருக்கு எலியா கூறிய செய்தியானது இன்னமும் ஒரே மாதிரியானதாக இருந்தது (வசனம் 16); தேவனுடைய வார்த்தை மாறுவதில்லை. தேவன் எலியாவிடம் கூறிய யாவற்றையும் அவர் [எலியா] செய்தார்; அவரது பொது ஊழியம் நிறைவுற்றது.
2. அகசியா, தேவன் கூறியிருந்தபடியே மரித்தார் (வசனம் 17); தேவனுடைய வார்த்தை நிச்சயமானதாக உள்ளது.

III. ஆவிக்குரிய இஸ்ரவேலின் பகுத்தறியும் சீஷன்.

A. இந்தச் சிறிய, கவலைக்குரிய வரலாற்றில் தேவன் நமக்குப் பாடங்களைக் கொண்டுள்ளார் (ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11). நாம் கருத்தொருமைப்படாத எவர்மீதும் வானத்தில் இருந்து அக்கினியைத் தரவழைக்க வேண்டும் என்பது இவ்விடத்தில் பாடமாக *இல்லை* (லூக்கா 9:54-56). மாறாக, பகுத்தறியும் சீஷன் என்பவர் இந்த எடுத்துரைப்பில் இருந்து குறைந்தபட்சம் மூன்று பாடங்களைக் கற்கிறார்:

1. தேவனுடைய வசனத்தைக் கவனிப்பதற்கு நாம் ஒருக்காலும் முதிர்வயதானவர் ஆவதில்லை.
   a. எலியா முதிர்வயதானவராக இருந்தபோதிலும், அவர் இன்னமும் "கர்த்தருடைய வார்த்தைக்காக" காத்திருந்தார்.
   b. அகசியா, யெகோவாவின் வார்த்தைகளை *அல்ல*, ஆனால் எக்ரோனிடம் இருந்து வார்த்தைகளையே விரும்பினார்.
      (1) தேவனுடைய வார்த்தையினிடத்தில் செல்

வதற்குப் பதிலாக, இன்றைய நாட்களில் சிலர், மூடநம்பிக்கை என்ற எக்ரோனிடத்தில் செல்லுகின்றனர்: ஜோஸியம், டாரட் அட்டைகள், ஊஜா பலகை முதலியன. இவற்றில் பெரும்பான்மையானவை "வேடிக்கை" என்ற பெயரில் செய்யப்படுகின்றன, ஆனால் இவை சாத்தானுக்குக் கதவை திறந்துவிடுகின்றன. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டனம் செய்கின்றன (லேவியராகமம் 19; உபாகமம் 18; நடபடிகள் 19).

(2) மற்றவர்கள், மனிதப் புரிந்துகொள்ளுதல் என்ற எக்ரோனிடத்தில் செல்லுகின்றனர்: அறிவியலும் உலகக் கல்வியும் எல்லாப் பதில்களையும் கொண்டுள்ளதாக அவர்கள் நினைக்கின்றனர் (நீதிமொழிகள் 3:5, 6).

2. தேவனுக்கு எதிரானவற்றை வெறுப்பதற்கு நாம் ஒருக்காலும் முதிர்வயதானவர் ஆவதில்லை.
   a. துன்மார்க்கத்திற்குத் தெய்வீக தண்டனையை நாம் கண்ணோக்குகையில், (பழைய ஏற்பாட்டின் கீழ் இருந்த) தற்காலிகமானவற்றிற்கும் நித்தியமானவற்றிற்கும் இடையில் நாம் வித்தியாசத்தை உணர வேண்டும்.
      (1) அன்று தேவன், மேசியா வரவிருந்த ஒரு மக்களினத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார். அவர்களைப் பாதுகாப்பதற்குப் பௌதீக தண்டனை தேவையாக இருந்தது.
      (2) இனியும் இதுவே விஷயமாக இருப்பதில்லை.
   b. இது, நாம் துன்மார்க்கத்தைப் பற்றி எலியா செய்தது போல் அவ்வளவு பலமாக விசுவாசிக்கத் தேவையில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை (எபிரெயர் 1:9; முதலியன)!

3. தேவனுடைய சித்தத்தைச் செய்யத் துரிதப்படுவதற்கு ஒருவர் ஒருக்காலும் முதிர் வயதானவர் ஆவதில்லை.

முடிவுரை

A. கீழ்ப்படியாதவர்கள் மீது இன்னமும் அக்கினி விழக்கூடியதாக உள்ளது - இது இந்த வாழ்வில் நடப்பதில்லை, ஆனால் இயேசு மறுபடியும் வரும்போது இது நடக்கும் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).

B. நாம் படித்துள்ள வரலாற்றில் வந்த மூன்றாவது தலைவனுடைய ஞானத்தை நாம் கொண்டிருப்போமாக; நாம் நம்மைத் தேவனுடைய இரக்கத்திற்குக் கிடத்துவோமாக! எலியா இரக்கத்தைப் பெற்றிருந்தது போலவே தேவன் நம்மீதும் இரக்கம் பாராட்டுவார்.